**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**15.10.2018 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திருமதி.பார்வதி.எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

**1)** அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **19.07.2018** மற்றும் அரசாணை எண் **76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் துறை நாள் **26.07.2018** ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** அட்டவனை நாளில் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கூடலூர் நகராட்சி சொத்துவரியினை **01.04.2018** முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிட்டுள்ளப்படி இந்த மதிப்பீடு விபர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாக கொண்டும் இந்நகர்மன்ற தீர்மானம் எண் **189** நாள் **07.09.2018** ன்படி மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) **01.04.2018** முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதை A,B மற்றும் C எண மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு விபரங்கள் தமிழ் ஆங்கில நாளிதழ்கள் மற்றும் கூடலூர் நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்விபரங்கள் நேரடியாக அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும். இது குறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிட்ட **30** தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலம் கூடலூர் நகராட்சி ஆணையருக்கு அனுப்பவும். இதன் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துக்களும் ஆட்சேபனைகளும் **(31** ஆட்சேபனை/கருத்துக்கள்**)** மன்றம் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 01.04.2018** முதல் அமல்படுத்தவுள்ள மண்டலங்களுக்கு அடிப்படை மதிப்பு(Zonal Value)

எ–மண்டலம் – ரூ.**2.25**
பி–மண்டலம் – ரூ.**1.80**
சி–மண்டலம் – ரூ.**1.20**
டி– நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

கூடலூா் நகராட்சி(நீலகிாி)

30.10.2018 ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகா்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்

தலைமை– திருமதி.பாா்வதி.எம்.ஏ.,

தனி அலுவலா் மற்றும் ஆணையாளா்

1) இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு பம்பு அறைக்கு எலக்ட்ாிக்கல் பணி மேற்கொள்ள பொது நிதி 2018–19 ன் ஒப்பந்தபுள்ளி 12.10.2018 ம் நாள் மாலை 3.00 மணிக்கு பெறப்பட்ட விபரம்.

| வ.எண் | விலைப்புள்ளிதாராின் பணிகள் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு பம்பு அறைக்கு எலக்ட்ாிக்கல் பணி செய்தல் | 8.80 | திருவாளா் அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.19% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு –** மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி 0.05% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளா். அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் அவா்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2) இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு செப்டிக் டேங்கு அமைக்கும் பணி மேற்கொள்ள பொது நிதி 2018–19 ன் ஒப்பந்தபுள்ளி 12.10.2018 ம் நாள் மாலை 3.00 மணிக்கு பெறப்பட்ட விபரம்.

| வ.எண் | விலைப்புள்ளிதாராின் பணிகள் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு செப்டிக் டேங்கு அமைக்கும் பணி செய்தல் | 9.70 | திருவாளா் அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.40% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு –** மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி 0.04% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளா். அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் அவா்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3) இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு பிளம்பிங் பணி மேற்கொள்ள பொது நிதி 2018–19 ன் ஒப்பந்தபுள்ளி 12.10.2018 ம் நாள் மாலை 3.00 மணிக்கு பெறப்பட்ட விபரம்.

| வ.எண் | விலைப்புள்ளிதாராின் பணிகள் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பணியாளா்கள் குடியிருப்பு கட்டிடத்திற்கு பிளம்பிங் பணி மேற்கொள்ளுதல் | 10.00 | திருவாளா் அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.22% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு –** மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி 0.04% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளா். அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் அவா்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

4) தமிழ்நாடு பணியமைப்பு – நகராட்சி பொது சுகாதாரப் பணி – துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவு கோல் – திருத்தியமைத்த அரசாணை எண்.101 நாள் 30.04.1997 ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி கூடலூர் நகராட்சியில் மொத்தம் 228 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். ஆனால் தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 26 மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் 80 ஆக மொத்தம் 106 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்த ஒப்பந்த காலம் 31.10.2018 உடன் முடிவடைகிறது.

கூடலூர் நகராட்சியில் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நகரின் வளர்ச்சி காரணமாகவும் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து வருவதாலும் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தேவையான துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேலும் 122 துப்புரவு பணியாளர்களை நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு பொதுசுகாதாரப் பணியினை தொய்வு இல்லாமல் பணி மேற்கொள்ள வெளி ஆட்கள் மூலம் (Out sourcing) துப்புரவு பணியாளர்களை பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** தற்போது நகராட்சியின் நிதி நிலை மேலும் 122 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க இயலாத நிலையில் உள்ளதால் நகராட்சி நிதி நிலை மேம்படும் பட்சத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ளலாம்.

5) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 தாஜ் ஹாஸ்பிட்டல் பகுதியில் தார்சாலை அமைக்க பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

6) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 புறமனவயல் பகுதியில் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய மூடி அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

7) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 மௌன்ட் பிளஸன்ட் பகுதியில் தார்சாலை அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

8) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 கோத்தரவயல் முதல் மௌன்ட் பிளஸன்ட் வரை சாலை பழுதடைந்து பள்ளிபேருந்து செல்ல இயலாத நிலை உள்ளதால் பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தார்சாலை அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எ 5 வனேஸ்வரி கோவில் அருகில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தார்சாலை அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.30/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

10) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 காளம்புழா பகுதியில் உள்ள கிறிஸ்த்துவ மயானம் பாதுகாப்பு கருதி கேட் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோரரயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.90/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

11) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 முத்தமிழ் நகர் பகுதியில் தார் சாலை பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தார் சாலை அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

12) தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019 ம் ஆண்டின்கீழ் கீழ் காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.12981/2018/இ3 நாள் 27.06.2018 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக தொழில்நுட்ப அனுமதி பெற்று 05.10.2018 ல் அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1,6,7,9,15,16,17 மற்றும் 18 ஒ.வி.எச் சாலை சுங்கம் முதல் பழைய பேரூந்து நிலையம் வரை கோழிப்பாலம் சாலை, சளிவயல் சாலை, மில்லிக்குண்ணு சாலை மங்குழி சாலை,மாக்கமூலா சாலை, மாக்கமூலா முதல் புத்தூர்வயல் ஆதிவாசி காலனி வரை, தேன்வயல் ஆதிவாசி காலனி சாலை, குனியல் சாலை மற்றும் தோட்டமூலா சாலையை மேம்படுத்துதல் | 300.00 | திரு.ராயன், சுங்கம், சேரம்பாடி | 4.95% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர்.ராயன் கன்ஸ்ட்ரக்ஷன்.லிட், சேரம்பாடி | 7.01% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு –** மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி 4.95% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ராயன், சுங்கம், சேரம்பாடி அவர்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

13) இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் இயங்கும் TN 43 Y 0437 பொலீரோ ஈப்பு வாகனத்திற்கு நான்கு டயர்கள் விநியோகம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கோரிய திருவாளர்.டயர்பிலக்ஸ், செம்பாலா, கூடலூர் நிறுவனத்தில் பணிசெய்யவும் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பணிகள் | M/sடயர்பிலக்ஸ, செம்பாலா, கூடலூர் | M/s.பவர்பின் கூடலூர் | M/s பாப்புலர் டயர், செம்பாலா, கூடலூர் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் இயங்கும் TN 43 Y 0437 பொலீரோ ஈப்பு வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்கள் விநியோகம் செய்தல் | ரூ.31100/– | ரூ.32100/– | ரூ.33450/– |

**அலுவலக குறிப்பு –** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர் டயர்பிலக்ஸ, செம்பாலா, கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ.31100/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

14) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 ல் அதிகாரிவயல் 12/748 BEF வீடு முதல் 12/748 B6 வரை பழுதடைந்த கழிவு நீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலையை சீரமைக்க பொது மக்கள் கேட்டுகொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

15) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கானமானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ளஅனைத்து வார்டுகளிலும் உயர் தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க,

கூடலூர் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர்சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 21 வார்டுகளில் ரூ.378.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்றி எழுபத்தி எட்டு இலட்சம் ) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில்முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள்(Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில்முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும் இதற்கான அனுமதி நகரராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி பெற நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் |
|---|---|---|
| 1 | 1 | கே.கே.நகர் |
| 2 | 2 | கோக்கால் |
| 3 | 3 | ஹெல்த்கேம்பு |
| 4 | 4 | ராஜகோபாலபுரம் |
| 5 | 5 | கோத்தர்வயல் |
| 6 | 6 | அக்ரஹாரம் |
| 7 | 7 | கோழிப்பாலம் |
| 8 | 8 | பள்ளிப்படி |
| 9 | 9 | சளிவயல் |
| 10 | 10 | நந்தட்டி |
| 11 | 11 | எம்.ஜி.ஆர். நகர் |
| 12 | 12 | டி.கே. பேட்டை |
| 13 | 13 | காசிம்வயல் |
| 14 | 14 | அத்திப்பாளி |
| 15 | 15 | விமலகிரி |
| 16 | 16 | புத்தூர்வயல் |
| 17 | 17 | தொரப்பள்ளி |
| 18 | 18 | மார்தோமா நகர் |
| 19 | 19 | காளம்புழா |
| 20 | 20 | முதல் மைல் |
| 21 | 21 | இரண்டாவது மைல் |

அலுவலக குறிப்பு—
1) மன்றம் அங்கீகரிக்கலாம்
2) மேற்படி பணியானது திட்டப்பணியாக இருப்பதால் உரிய காலத்திற்குள் செய்து முடிக்கவேண்டியிருப்பதாலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** இந்நகராட்சியில் 4 இடங்களில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் (AVC) அமைக்கும் பணிக்கு **22.10.2018** ல் ஒப்பந்தப்புள்ளிகளின் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.தாரனா இன்பராஸ்ட்ரக்சன் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிட் |

மேற்படி ஒப்பந்ததாரர் தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்தால் விலை விபரங்கள் **29.10.2018** அன்று பதிவிறக்கம் செய்யப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளார்.

| S.No | Description | Rate to be remitted to the municipality (Rupees per 20 ltr) | Rate to be charges for sale to public (Rupees per 20 ltr) | Rate be charged for sale to public (Rupee per 1ltr from chilling machine) |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 ltr/Hr capacity community drinking water system through reverse Osmosis with UV treatment as in Gudalur Municipality under PPP mode. | **1.00** | **6.90** | **1.00** |

**அலுவலக குறிப்பு–** மேற்படி வரபெற்ற திருவாளர். தாரனா இன்பராஸ்ட்ரக்சன் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிட் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**